consideration of the Government to utilise the services of the Trainees in Tailoring at the Service Homes to manufacture uniforms for the Government-owned undertakings?

தையற்கலேயில் பயிற்சி பெற்றுவரும் பயிற்சியாளர்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

பணி இல்லங்களில் தையற்கலேயிற் பயிற்சி பெற்றுவரும் பயிற்சியாளர்களின் பணிகளே, அரசு நிறுவனங்களுக்கான நிகராடைகளேத் தைப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : இல்லே.

Drought Conditions in Tamil Nadu

* 227 Q.—Thiru M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Members of the Board of Revenue have been asked to assess the drought conditions in Tamil Nadu districts; and

(*b*) if so, the details thereof?

தமிழ்நாட்டில் உள்ள வறட்சி நிலே

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் மாவட்டங்களில் உள்ள வறட்சி நிலேயை மதிப்பிடுமாறு வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) சில மாவட்டங்களில் பாதகமான பருவநிலேமைகள் நிலவுவதுபற்றி அறிக்கைகள் அரசுக்குக் கிடைத்ததால், வறட்சி நிலேமைகளே மதிப்பிட்டு அரசுக்கு அறிக்கை ஒன்று பணிந்தனுப்பு

1972 ஆகஸ்ட் 23]

வதற்காக, வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யலாம் என்று 8—5—1972-ல் வாரியத்துக்கு அரசு கட்டளையிட்டது. ஆனல் இதன்பின்னர் மாவட்டங்களில் நல்ல மழை பொழிந்ததால், நிலைமை கணிசமான அளவுக்கு முன்னேற்ற மடைந்தது. எனவே, இதுபற்றி மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆயினும், மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, நிலைமையை மதிப்பிட்டு, அரசுக்கு அறிக்கை அனுப்பு மாறு அண்மையில் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்; வருவாய்த்துறை வாரியத்தின் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நம்முடைய மாநிலத்தில், சில மாவட்டங் களிலும், சில தாலூக்காக்களிலும், அடிக்கடி இதுமாதிரி வறட்சி நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே இதை நிரந்தரமாகப் போக்குவதற்கு உரிய முயற்சியை அரசு எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில், ஆவுடையார் கோவில் பகுதியில், 4, 5 வருடமாக இந்த வறட்சி நிலைமை இருந்து வருகிறது. அதன் தொடர்பாக அரசு நடவடிக்கை எடுத்து, நிரந்தர மாக வறட்சியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா? அப்படியானல் என்ன நடவடிக்கை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வறட்சி, மழை தொடர்ச்சி யாகப் பெய்யாத காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அந்த வறட்சிப் பகுதியில் மழை பரவலாகப் பெய்யச் செய்யும் ஆணை தமிழக அரசுக்கு இல்லையே. என்ன செய்வது ?

திரு. கே. ராஜாராம் : தமிழ்நாட்டில் பல இடங்களில் குடிநீர் கிடைப்பதற்குக் கூட கஷ்டம் வந்துள்ளது. வட ஆர்க்காடு மாவட் டத்தில், மதுரையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங் களிலும் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி ஏதாவது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிராமங்களில் எங்கெங்கே குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறதோ, அங்கே எல்லாம் குடிநீர் வசதி செய்வதற்கான ஆய்வுகளை நடத்த வேண்டுமென்று அங்கேயுள்ள மாவட்ட ஆட்சி வருவாய்த்துறை அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறர்கள்.

[1972 ஆகஸ்ட் 23

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பரவலாக பல இடங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். மேலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர்கூட கடந்த 10 நாட்களுக்கு முன்னால் அந்த மாவட்டத்தில் அதிகாரிகளைச் சந்தித்து, குடிநீர்ப் பிரச்னைக்கு ஆவன செய்யும்படி சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வட ஆர்க்காடு மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை, நானும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்கிற காரணத்தால், நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஆங்காங்கே திட்டுத்திட்டாக இருக்கிற சில இடங்களில் தொடர்ந்து மழை பெய்யாத நிலையில் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகளையும், உள்ளூர் உறுப்பினர்களையும் அந்த நிலைமையைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை கொடுக்குமாறு கேட்டிருக்கிறோம். ஒரு வாரத்தில் அந்த அறிக்கை வந்து விடுமென்று எதிர் பார்க்கிறோம். அது வந்த பிறகு, அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : வறட்சி நிலைமைபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த மாவட்டங்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தொடர்ந்து மழை பெய்யாத நிலைமை திருச்சி, வடஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்தது. ஆனால் பின்னால் பருவ மழை வந்ததால் ஓரளவு நிலைமை மாறும் என்று எதிர்பார்த்தோம். இப்போது மீண்டும் அது போன்ற நிலைமை இருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்தது. வருவாய்த் துறை அதிகாரியும், உள்ளூர் உறுப்பினர்களும் அங்குள்ள நிலைமையைப் பரிசீலித்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு வாரத்துக்குள் அறிக்கையை எதிர் பார்க்கிறோம். அந்த அறிக்கையை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : இராமநாதபுரம் மாவட்டம் மேலப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்யாத நிலைமை இருக்கிறது. ஒரு துளிகூட மழை பெய்யவில்லை என்பதை அரசு அறியுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மழை பெய்யவில்லை என்பதும் எந்தெந்தப் பகுதியில் என்பதும் அரசுக்குத் தெரியும். ஏனென்றால், மழை பெய்தவுடனே அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கெங்கு மழை பெய்திருக்கிறது என்ற தகவலை அனுப்புகிறார். எங்கே மழை பெய்யவில்லையோ, அங்கேயெல்லாம் மழையைப் பெய்விக்கச் செய்யும் அதிகாரம் இல்லையே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்படி அடிக்கடி வறட்சியாக இருக்கும் பகுதிகளில் நிரந்தரமான தீர்வு காண திட்டம் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அடிக்கடி வறட்சி எற்படுகிற மாவட்டங்களில் மத்திய அரசின் உதவியுடன் நிவாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான வறட்சியான பகுதிகளுக்கு நிரந்தரமாக ஏதாவது செய்வதற்கு இந்த அரசிடம் "மாஸ்டர் பிளான்" ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மழை குறைந்துகொண்டே போகிறது என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொண்டிருக்கிறோம். மழை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டு வருகிறது. இதற்கு இயற்கைதான் காரணம். இதற்கு ஆவன செய்துவருகிறோம்.

Tenancy Records

* 228. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Tenancy Records have been completed in this State; and

(*b*) if not, when this work is expected to be completed?

குடியானவர் ஆவணப்பதிவுப் பணிகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் குடியானவர் ஆவணப்பதிவு பணிகள் முடிந்து விட்டனவா ?